**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.
2021ம் வருடம் அக்டோபர் திங்கள் 08 ம் நாள் வெள்ளிக்கிழமை
**அ.வ.எண்.372/2016 இல் இ.ம.எண்.1/2021**

1.A.செல்வராஜ்
2.அகிலாண்டீஸ்வரி ... மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள்

/ எதிர் /

1.N.நாச்சிமுத்து
2.ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி, பொள்ளாச்சி
3.நகரமைப்பு அலுவலர், பொள்ளாச்சி நகராட்சி,பொள்ளாச்சி. ... எதிர்மனுதாரர்கள்/ வாதி / 3, 4 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 20.09.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / 1, 2 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மகாதேவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் / 3, 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

## ஆணையுரை

இம்மனுவானது மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் விவரப்பத்திரிக்கை தாக்கல், செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VIII விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:</u>**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் 1, 2ம் பிரதிவாதிகள். 1ம் எதிர்மனுதாரர் / வாதி அசல் வழக்கினை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இதர பரிகாரம் கோரியும் மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் / 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்து, மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பிலும், 3, 4 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பிலும் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ளது. மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்த சமயம் சில விவரங்களை குறிப்பிடாமல் தவறுதலாக விட்டுள்ளார்கள். மேற்படி விவரங்கள் மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பு விவரப்பத்திரிக்கைக்கு முக்கியமான விவரங்களாகும். அதன் பொருட்டு மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால் மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் விவரப்பத்திரிக்கையை தாக்கல் செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) **<u>1ம் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :**

மனுதாரர் / வாதியின் மனு பொய்யும், மோசடியானது என்பதால் சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரர் / வாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவறானது. மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 17.01.2017-ம் தேதியன்று ஏற்கனவே விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விவரப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள அதே சங்கதிகளை மீண்டும் குறிப்பிட்டு

கூடுதல் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கூடுதல் விவரப்பத்திரிக்கையை தாக்கல் செய்வதற்கு போதுமான முகாந்திரம் இல்லை. எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.450/2017 மனுவின் நீதிமன்ற ஆணை அவமதிப்பு நடவடிக்கையிலிருந்து தப்பிக்க வேண்டியும், விசாரணையை காலங்கடத்திட வேண்டியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) இம்மனுவானது, மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் விவரப்பத்திரிக்கை தாக்கல், செய்யப்படுவதை ஏற்றுக்கொண்டு உத்தரவு வழங்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள், எதிர்மனுதாரர் / வாதி / 3, 4 பிரதிவாதிகள் தரப்பில், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரை கேட்கப்பட்டது.

7) மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் அதில் சில முக்கிய விபரங்கள் விடுபட்டுவிட்டதால் கூடுதல் விவரப்பத்திரிக்கையை தாக்கல் செய்ய அனுமதி அளிக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கு விரோதமாக யாதொரு சங்கதிகளும் கூடுதல் விவரப்பத்திரிக்கையில் குறிப்பிடப்படாத நிலையில்

கூடுதல் விவரப்பத்திரிக்கையை ஏற்றுக்கொண்டு உத்தரவிடவேண்டுமென்று வாதிட்டுள்ளார்.

**8)** எதிர்மனுதாரர் / வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கானது 2016–ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 17.01.2017–ம் தேதியில் மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் குறிப்பிட்டுள்ள அதே சங்கதிகளையே மீண்டும் கூடுதல் விவரப்பத்திரிக்கையில் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.450/2017 மனுவின் நடவடிக்கையிலிருந்து தப்பிக்கும் பொருட்டும், வழக்கினை காலம் கடத்தும் பொருட்டும் மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று வாதிட்டுள்ளார்.

**9)** இரு தரப்பு வாதுரையிலிருந்தும், வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்தும், மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் விவரப்பத்திரிக்கை தாக்கல், செய்யப்படுவதை ஏற்றுக்கொண்டு உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இதர பரிகாரங்கள் கோரியும் எதிர்மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும் தெரிய வருகிறது. மனுதாரர்கள் / 1, 2ம் பிரதிவாதிகள் தரப்பில் 17.01.2017ம் தேதியில் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரப்பத்திரிக்கையில் சில விபரங்களை குறிப்பிடாமல் விட்டு விட்டதாகவும், அதனை குறிப்பிட்டு கூடுதல் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்ய அனுமதி அளித்து தற்போது மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் விவரப்பத்திரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

10) எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள விபரங்களையே தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் விவரப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

11) மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள விவரப்பத்திரிக்கை மற்றும் தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் விவரப்பத்திரிக்கையை பரிசீலிக்கும் போது மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளால் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள விவரப்பத்திரிக்கையில் உள்ள சங்கதிகளின் அடிப்படையிலேயே கூடுதல் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது மேலும், ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளுக்கு மாறாகவோ, ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரப்பத்திரிக்கையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை மறுத்துரைக்கும் வகையிலோ எந்த சங்கதிகளும் கூடுதல் விவரப்பத்திரிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும் தெரிய வருகிறது.

12) எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் அசல் வழக்குடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.1243/2016 மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை கடைபிடிக்க தவறிய காரணத்திற்காக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை கோரி எதிர்மனுதாரர் / வாதியால் இ.ம.எண்.450/2017 மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் மேற்படி மனு நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்கும் பொருட்டும், வழக்கினை காலம் கடத்த பொருட்டும், ஐந்து ஆண்டுகள் கழித்து கூடுதல் விவரப்பத்திரிக்கையை ஏற்றுக்கொள்ள கோரி மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

13) ஒப்புக்கொண்டுள்ளவாறு, அசல் வழக்கானது 2016–ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் 2017 ம் வருடத்தில் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில்

நான்கு ஆண்டுகள் கழித்து கூடுதல் விவரப்பத்திரிக்கையை ஏற்றுக்கொள்ள கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினால் வழக்கில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் எதிர்மனுதாரர் / வாதிக்கு செலவுத் தொகை செலுத்துவதின் மூலம் ஈடு செய்யலாம் என்பதாலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர் / வாதிக்கு யாதொரு பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும் நீதியின் நலன் கருதி இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

**14)** முடிவாக, மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.250/-ஐ எதிர்மனுதாரர் / வாதிக்கு வரும் 22.10.2021 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும்பட்சத்தில் இம்மனுவானது அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தானாகவே தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

அழைக்க : 22.10.2021

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல்:**

**- இல்லை -**

**<u>எதிர்மனுதாரர்கள் / வாதி / 3, 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பட்டியல் :</u>**

– இல்லை. –

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

------------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

அ.வ.எண்.372/2016 இல் இ.ம.எண்.1/2021

நாள் : 08.10.2021

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

------------------------------------